**IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, SALEM.**

**S.C.No.138/2013**

Date: 26.02.2024.

PW-3: அமிர்தலிங்கம்

சாட்சி இன்று மீண்டும் மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு எதிரிகள் 1, 2, 5, 7, 9, 11, 14 முதல் 18 தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.

**A1 to A3, A5, A6, A9, A11, A13, A14 & A16 to A18 present. A7, A8 & 15 called absent. Petition u.sec.317 Cr.P.C filed and allowed.**

**1, 2, 5, 7, 9, 11, 14 முதல் 18 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எனது வீட்டிற்கும் மேற்கு பக்கம் துரைசெல்வத்தின் வீடு இருக்கிறது என்றால் சரிதான். அந்த இரண்டு வீடுகளுக்கும் இடையே 20 அடி இடைவெளி இருக்கிறது. இவ்வழக்கு சம்பவம் தொடர்பாக நான் காவல்நிலையத்திற்கு போகவில்லை. நானும், ராஜலிங்கமும் மேற்படி துரைசெல்வத்தின் வீட்டிற்குள் நுழைந்து தப்பித்துக்கொள்வதற்கு முயற்சி செய்யவில்லை என்றால் சரிதான்.

சம்பவத்தின்போது எனது அலைபேசி கீழே விழுந்து உடைந்துவிட்டது என்றால் சரியல்ல. அந்த சமயத்தில் என்னிடம் அலைபேசி இல்லை. எனது செருப்புகள் கீழே விழுந்துவிட்டதா என்றால் அந்த சமயத்தில் நான் செருப்பு போடவில்லை. வண்ணாங்குளத்திலிருந்து எனது வீடு சுமார் 700 மீ தொலைவில் இருக்கிறது. சம்பவத்தினத்தன்று எனக்கு சொந்தமாக செருப்புகள் இருந்ததா என்றால் வீட்டில் செருப்புகள் இருந்தது. அதனை நான் சம்பவத்தின்போது பயன்படுத்தவில்லை.

வண்ணாங்குளத்திலிருந்து நாங்கள் திரும்பி வந்தபோது யார்யார் செல்போன்கள் வைத்திருந்தார்கள் என்றும், யார் யார் செருப்புகள் அணிந்திருந்தார்கள் என்றும் என்னால் குறிப்பாக சொல்லமுடியாது என்றால் சரிதான். நான் 10-ஆம் வகுப்பு வரை படித்திருக்கிறேன். நான் என்ன வேலைக்கு சென்றுகொண்டிருந்தேன் என்றால் விவசாயம் செய்தேன். வீட்டிலிருந்த ஆடு, மாடுகளை மேய்த்துக்கொண்டிருந்தேன். சம்பவ தினத்தன்று நான் எத்தனை ஆடு, மாடுகளை மேய்த்து கொண்டிருந்தேன் என்றால் அப்போது எங்களிடம் எந்த கால்நடைகளும் இல்லை.

எங்களுக்கு சொந்தமான கால்நடைகளை எதிரிகள் கொள்ளையடித்துவிட்டார்கள் என்று சாட்சி சுயமாக சொல்லுகிறார். நான் வங்குடியில் மேலத்தெருவில் வசிக்கிறேன் என்றால் அத்தெருவின் பெயர் காளியம்மன் கோவில் தெருவாகும்.

சம்பவ சமயத்தில் எங்களது வீட்டில் குடிநீர் குழாய் இணைப்பு இருந்தது என்றால் சரிதான். 3 தினங்களாக அக்குழாயில் தண்ணீர் வரவில்லை என்று சாட்சி சுயமாக கூறுகிறார். சம்பவத்தன்று காலை 10.00 மணிக்கு அக்குழாயில் தண்ணீர் வந்தது என்றால் சரியல்ல. அந்த சமயத்தில் நான் பாண்டிசேரியில் உள்ள துணிகடையில் வேலை செய்து வந்தேன் என்றால் சரியல்ல.

நான் இவ்வழக்கு சம்மந்தமாக சேலம் சிறார் நீதி குழுமத்தில் சாட்சியம் அளித்திருக்கிறேன் என்றால் சரிதான். அந்த சாட்சியத்தில் நான் மீன்சுருட்டி காவல்நிலையத்திற்கு சென்றதாக சாட்சியம் அளித்திருக்கிறேன் என்றால் சரியல்ல. அந்த வழக்கில் நான் இரண்டாவது சாட்சியாக விசாரிக்கப்பட்டிருக்கிறேன் என்றால் சாட்சி அந்த சாட்சிய வாக்குமூலத்தை பார்த்துவிட்டு நீண்ட தயக்கத்திற்கு பிறகு ஆம் என்று சொல்லுகிறார். அந்த சாட்சிய வாக்குமூலத்திலிருப்பது என்னுடைய கையொப்பங்கள் என்றால் சரிதான்.

அந்த சாட்சிய வாக்குமூலத்தில் சம்பவத்தின்போது நாங்கள் அங்கிருந்து தப்பித்து மீன்சுருட்டிக்கு போய்விட்டதாக சொல்லியிருக்கிறேன் என்றால் அதுபற்றி எனக்கு நினைவில்லை. ( சாட்சியின் சிறார் நீதிமன்ற சாட்சிய வாக்குமூலத்தில் சாட்சி மீன்சுருட்டி காவல்நிலையத்திற்கு சென்றதாக சாட்சியம் அளிக்கப்படவில்லை என்று எதிரி தரப்பு வழக்கறிஞர் ஒப்புக்கொள்ளுகிறார். எனவே குறுக்குவிசாரணையின் போது ஏற்கனவே நீதிமன்றத்தில் அளிக்கப்பட்டுள்ள சாட்சியம் தொடர்பாக கேள்விகள் கேட்கும்போது சரியான கேள்விகளை கேட்கும்படி எதிரி தரப்பு வழக்கறிஞருக்கு அறிவுறுத்தப்பட்டது.)

நான் அன்றைய தினம் மீன்சுருட்டிக்கு போகவில்லை. ( வழக்கறிஞர் மீண்டும் சிறார் நீதிமன்ற சாட்சியின் சாட்சியம் தொடர்பாக கேள்வி எழுப்ப முனைந்தபோது சாட்சி நீதிமன்றத்தை பார்த்து சிறார் நீதிமன்றத்தில் தான் அளித்த சாட்சிய வாக்குமூலத்தின் அடிப்படையில் இந்த வழக்கில் தீர்ப்பு சொல்லமுடியுமா என்ற

கேள்வியை நீதிமன்றத்திடம் கேட்டு அதற்கு பதில் அளிக்கும் படி நீதிமன்றத்தை கேட்டுக்கொண்டார். அப்படிப்பட்ட கேள்விகளை எழுப்ப கூடாது என்று சாட்சி நீதிமன்றத்தாலும், அறிவார்ந்த அரசு தரப்பு வழக்கறிஞராலும் எச்சரிக்கப்பட்டார்.)

சிறார் நீதிமன்றத்தில் நான் அளித்த சாட்சியத்தில் சம்பவம் பற்றி கேள்விபட்டு போலிசார்வந்தார்கள் என்று நான் சாட்சியம் அளித்திருக்கிறேன் என்றால் சாட்சி சிறிது யோசித்து விட்டு அதுபற்றி தனக்கு நினைவில்லை என்று சொல்லுகிறார். காயமடைந்த என் தாயாரை மருத்துவமனைக்கு அழைத்து செல்வதற்கு நான் எந்த முயற்சியும் செய்யவில்லை என்றால் சம்பவ தினத்தன்று பிற்பகல் 12.00 மணியளவில் ஆம்புலன்ஸ் வாகனம், போலிஸ் வாகனம் ஆகியவை வந்த சத்தம் அதிகமாக கேட்டது என்றும், அந்த சமயத்தில் என் தாயார் உயிருக்கு போராடிகொண்டிருந்தார் என்றும், என் சகோதர்கள் இறந்துவிட்டார்கள் என்றும், அப்போது எனது சின்னம்மா சரோஜாவும், எனது மாமா சேகரும் என் தாயாரை ஆம்புலன்ஸ் வாகனத்தில் அழைத்து சென்றார்கள் என்றும் சாட்சி பதில் சொல்லுகிறார்.

வழக்கறிஞர் கேட்ட கேள்விக்கு நீங்கள் அளித்தது சரியான பதிலா என்று நீதிமன்றம் கேட்டதற்கு பின்னிட்டு சாட்சி எதிரிகள் எங்களது குடும்பத்தினரை வெட்டியதால் தாங்கள் பயந்து கொண்டு ஓடிவிட்டதாகவும், அதிலிருந்து சுமார் 2 மணி நேரம் கழித்து தான் வந்து பார்த்தபோது போலிசார் இருந்தார்கள் என்றும் சொல்லுகிறார். எனது தாயாரை வெட்டியபோது நான் அந்த இடத்திலிருந்து 30 மீட்டர் தொலைவில் இருந்தேன். அப்போது என்னை சுற்றி எத்தனை எதிரிகள் இருந்தார்கள் என்றால் என்னை சுற்றி யாரும் இல்லை. ஆனால் எனது பெற்றோர் மற்றும் சகோதரர்களை சுற்றி எதிரிகள் நின்று கொண்டிருந்தார்கள்.

என்னை வெட்டுவதற்கு எந்த எதிரியும் முயற்சி செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிரிகள் என்னையும் வெட்டுவதற்கு முயற்சித்தார்கள். நான் தப்பித்து ஓடியபோது எனது காலில் முள்குத்தி சிராய்ப்பு காயங்கள் ஏற்பட்டது. முள் கிழித்தும் காயங்கள் ஏற்பட்டது. நான் கீழே விழவில்லை. என் தாயார் தாக்கப்பட்ட சமயத்தில் நான் எனது வீட்டிலிருந்து சுமார் 30 மீட்டர் தொலைவில் இருந்தேன்.

அப்போது ராஜலிங்கம் எனது பக்கத்தில் பக்கவாட்டு பகுதியில் ஓடிகொண்டிருந்தார். அவர் சம்பவத்தை பார்த்துகொண்டே தான் ஓடிகொண்டிருந்தார். என் தாயார் வெட்டப்பட்ட இடத்திற்கும், ராஜலிங்கம் ஓடிகொண்டிருந்த இடத்திற்கும் இடையே சுமார் 35 மீட்டர் தொலைவு இருக்கும். ராஜலிங்கமும், நானும் எவ்வளவு தூரம் ஒன்றாக ஓடினோம் என்றால் சுமார் 50 மீட்டர் தூரம் ஒன்றாக ஓடினோம். அதன்பின்னிட்டு இருவரும் பிரிந்துவிட்டோம்.

எந்த இடத்தில் நாங்கள் பிரிந்தோம் என்றால் எங்கள் வீட்டிற்கு பின்புறமுள்ள தெற்கு பகுதியில் பிரிந்தோம். எதிரிகள் யாரும் அந்த 50 மீட்டர் தூரத்திற்கு எங்களை துரத்தி கொண்டு வரவில்லையா என்றால் துரத்தி கொண்டுவந்தார்கள் ஆனால் நான் திரும்பி பார்க்கவில்லை. நான் அதிலிருந்து தொடர்ந்து சுமார் 1/2 தூரம் ஓடி அங்குள்ள ஒரு யூக்கலிப்டஸ் மர தோப்பிற்குள் புகுந்துவிட்டேன். நெஞ்சு அடைப்பது போல் இருந்ததால் என்னால் அதற்கு மேல் ஓடமுடியாமல் விழுந்துவிட்டேன்.

அதன்பின்னிட்டு போலிஸ் வாகனம் மற்றும் ஆம்புலன்ஸ் வந்த சத்தத்தை கேட்டு தான் நான் ஊருக்கு திரும்பினேன் என்றால் சரிதான். நான் சொன்ன மேற்படி யூக்கப்லிட்டஸ் தோப்பிற்கும் எனது வீட்டிற்கும் இடையே சுமார் 550 மீட்டர் தொலைவு இருக்கும். அந்த தோப்பிலிருந்து எனது வீட்டிற்கு நடந்து வருவதற்கு சுமார்15 நிமிடங்கள் பிடித்தது. நான் மீன்சுருட்டிக்கு போகவில்லை. அந்த தோப்பில் நான் சுமார் 2 மணி நேரம் படுத்திருந்தேன்.

சம்பவ தினத்தன்று நான் கிராமத்திலேயே இல்லை என்றாலும் பாண்டிசேரிக்கு வேலைக்கு போய்விட்டேன் என்றாலும் சரியல்ல. போலிசார் என்னிடம் கையொப்பம் பெற்றார்களா என்றால் இல்லை. போலிசார் என்னை எனது வீட்டில் வைத்து விசாரித்தார்களா என்றால் வீட்டின் முன்பாக வைத்து விசாரித்தார்கள். என்னை விசாரித்தபோது பிற்பகல் 3.00 மணி இருக்கும். ராஜலிங்கத்தை எத்தனை மணிக்கு விசாரித்தார்கள் என்று எனக்கு தெரியாது. போலிசார் என் முன்னால் வைத்து ராஜலிங்கத்தை விசாரிக்கவில்லை.

சம்பவதினத்தன்று காலை 8.00 மணியிலிருந்து 8.30 மணிக்குள்ளாக எங்களது கிராமத்தில் ஒரு கலவரம் நடந்தது என்றாலும், நான் அன்றைய தினம் பாண்டிசேரிக்கு

வேலைக்கு போய்விட்டதால் அந்த கலவரம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றாலும், எதிரிகள் எங்களுக்கு எதிராக தேசிங்குபாலன் கொலை வழக்கில் சாட்சியம் சொன்ன காரணத்தினால் அவர்களை பழிவாங்கவேண்டும் என்பதற்காக போலிசார் சொல்லிகொடுத்து பார்க்காதா சங்கதியை பார்த்ததாக பொய்யான சாட்சியம் சொல்லுகிறேன் என்றாலும் சரியல்ல.

சம்பவம் எவ்வளவு நேரம் நடந்தது என்றால் 20 நிமிடங்கள் நடந்தது. இந்த சம்பவத்தில் ராஜலிங்கத்திற்கு காயம் எதுவும் ஏற்படவில்லை என்றால் சரிதான். சம்பவதினத்தன்று பிற்பகல் 2.00 மணிக்கு தான் நான் பாண்டிசேரியிலிருந்து எங்களது கிராமத்திற்கு வந்தேன் என்றால் சரியல்ல. எங்களது கிராமத்தை சேர்ந்த 100 பேரை போலிசார் காவல்நிலையத்திற்கு அழைத்து சென்றுவிட்டார்கள் என்றால் சரியல்ல.

நான் சம்பவ இடத்தில் இருந்திருந்தால் எதிரிகள் என்னையும் வெட்டியிருப்பார்கள் என்றாலும், நான் சம்பவ இடத்தில் இல்லாத காரணத்தினால் தான் எனக்கு எந்த காயங்களும் ஏற்படவில்லை என்றாலும் சரியல்ல. எதிரிகள் யாரும் அன்றைய தினம் ஊரில் இல்லை என்றாலும், அவர்கள் யாரும் மேற்படி கலவரத்தில் கலந்துகொள்ளவில்லை என்றாலும் சரியல்ல. தேசிங்குபாலன் மரணத்திற்கு பின்னிட்டு எங்களது வீடு சூறையாடப்பட்டதற்கும், எதிரிகளுக்கும் எந்த சம்மந்தமும் கிடையாது என்றால் சரியல்ல.

எதிரிகளின் வீட்டை நாங்கள் சூறையாடவில்லை. கலவரத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எங்களது கிராமத்தில் அரசாங்கத்தால் வீடுகள் கட்டிகொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. மழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தான் அரசாங்கம் வீடுகள் கட்டி கொடுத்தது. அந்த வீடுகள் எதிரிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்படவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியவில்லை. வேறுயாருக்கு அந்த வீடுகள் ஒதுக்கப்பட்டது என்று எனக்கு தெரியாது. சம்பவத்திற்கு பின்னிட்டு நான் வீட்டை விட்டே வெளியே வருவதில்லை என்றும், அதனால் அதுபற்றி தனக்கு தெரியவில்லை என்றும் சாட்சி சுயமாக கூறுகிறார்.

தேசிங்குபாலன் மரணத்திற்கு பின்னிட்டு எங்களது வீடுகள் சூறையாடப்பட்டதில் வீட்டின் சுவர்கள் மட்டும் தான் இருந்தது என்றாலும், கூரைகள்

இல்லையென்றாலும் சரிதான். நாங்கள் பெயிலில் வெளியில் வந்ததிற்கு பிறகு தான் கூரை மீண்டும் வேயப்பட்டது என்று சாட்சி சுயமாக கூறுகிறார். எங்களது வீடு சூறையாடப்பட்டதற்கு பின்னிட்டு நாங்கள் சுமார் 10 தினங்கள் துரைசெல்வம் வீட்டில் தங்கியிருந்தோம். அந்த சமயத்திலேயே எங்களது வீடுகளை நாங்கள் புதுப்பித்துவிட்டோம்.

சம்பவ தினத்தன்று அ.சா.2 எங்களது ஊரில் இல்லை என்றால் சரியல்ல. சூறையாடப்பட்ட எங்களது வீடுகளை நாங்கள் சரிசெய்து சம்பவ சமயத்தில் அந்த வீடுகளில் குடியிருந்ததாக பொய்யாக சாட்சியம் சொல்லுகிறேன் என்றாலும், இப்போது வரை எங்களது வீடுகள் சரிசெய்யப்படாமல் அப்படியே தான்இருக்கிறது என்றாலும் சரியல்ல. என் தகப்பனார் கள்ளசாராயம் காய்ச்சி விற்பனை செய்வதை ஒரு தொழிலாக செய்து வந்தார் என்றாலும், அதன் காரணமாக அவர்மீது பலவழக்குகள் பதிவு செய்யப்பட்டது என்றாலும் சரியல்ல. 2000–ஆம் ஆண்டிலேயே மீன்சுருட்டி காவல்நிலைய சரகத்தில் கள்ளசாராயம் ஒழிக்கப்பட்டுவிட்டது என்று சாட்சி சுயமாக கூறுகிறார்.

சம்பவத்தினத்தன்று எங்களது குடும்பம் சாராயம் காய்ச்சி விற்பதற்கு எதிராகத்தான் கலவரமே நடந்தது என்றாலும், அக்கலவரமானது காலை 8.00 முதல் 8.30 மணிக்குள்ளாக முடிவடைந்துவிட்டது என்றாலும் சரியல்ல. சம்பவதினத்தன்று காலை 9.00 மணிக்கு போலிசார் சம்பவ இடத்திற்கு வந்து என் தாயாரை மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள் என்றாலும், அப்போது உடன் சரோஜாவும், சேகரும் சென்றார்கள் என்றாலும், காலை 9.00 மணிக்கு என் தாயாரை போலிசார் மருத்துவமனைக்கு அழைத்து சென்றதாக சொல்வது தவறு.

என் தாயாரை என் சின்னம்மாவும், மாமாவும் போலிசார் பாதுகாப்புடன் மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள் என்றால் சரிதான். ஆனால் அப்போது பிற்பகல் 12.00 மணி என்று சாட்சி சுயமாக சொல்லுகிறார். எத்தனை போலிசார் உடன்சென்றார்கள் என்று எனக்கு தெரியவில்லை. நான் என் தாயாரை ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன். அப்போது பிற்பகல் 3.00 மணி இருக்கும்.

நான் மீண்டும் மாலை 5.00 மணி முதல் 6.00 மணிக்கு வங்குடி கிராமத்திற்கு திரும்பி வந்தேன். என் தாயார் ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனையிலிருந்து தஞ்சாவூர் அரசு மருத்துவமனைக்கு மேல்சிகிச்சைக்காக கொண்டுசெல்லப்பட்டார் என்றால் சரிதான். அன்றைய தினமே கொண்டுபோய்விட்டார்கள்.

தேசிங்குபாலன் கொலைக்கு பின்னிட்டு எங்கள் ஊரில் வழக்கமான பாதுகாப்பு பணியில் இருந்தபோலிசார் முன்னிலையில் தான் வழக்கு சம்பவமானது காலை 8.00 மணிக்கு நடந்தது என்றாலும், அதனால் தான் போலிசாரே என் தாயாரை மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள் என்றாலும் சரியல்ல. தேசிங்குபாலன் கொலைக்கும் வழக்கு சம்பவத்திற்கும் இடைபட்ட காலத்தில் எங்கள் ஊரில் போலிசார் பாதுகாப்பு பணியில் இல்லை என்று சாட்சி சுயமாக சொல்லுகிறார்.

தேசிங்குபாலன் கொலைக்கு பின்னிட்டு நான் வங்குடி கிராமத்தில் இல்லை என்றாலும், அதனால் தான் சம்பவ தினத்தன்று காலை 8.00 மணிக்கு நடந்த கலவரம் குறித்து எனக்கு நேரில் தெரியவில்லை என்றாலும் சரியல்ல. தேசிங்குபாலன் கொலைக்கும் வழக்கு சம்பவத்திற்கும் இடைபட்ட காலத்தில் எங்கள் ஊரில் போலிசார் பாதுகாப்பு பணியில் இல்லை என்று வழக்கிற்காக பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல.

எனது முதல்விசாரணையில் சொன்னதுபோல் நான் எந்த வழக்கு சம்பவத்தையும் பார்க்கவில்லை என்றாலும், வழக்கிற்கும், எதிரிகளுக்கும் சம்மந்தமில்லை என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

**Sd/- G. Sri Rama Jeyam,**
**III Additional District Judge,**
**Salem.**